மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, தெலுங்கு மாணவர்கள் பயிலுகிற பள்ளியில் தெலுங்கு நூல்கள் வாங்கி வைக்கப்பட வேண்டியது இன்றியமையாததுதான். அந்தக் கோரிக்கை இப்போது பரிசீலனையில் இருக்கிறது. அதுபற்றிக் கல்வித் துறை தனியாக நடவடிக்கை எடுக்கும்.

குழந்தைகளுக்கான நூல்கள்.

*245 வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) குழந்தைகளுக்கான சிறந்த நூல்களை எழுதுவோருக்குப் பரிசு வழங்க மத்திய அரசு ஏதேனும் உதவித் தொகை வழங்குகிறதா ?

(இ) ஆம் எனில், ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு ரூபாய் வழங்கி வருகிறது ?

(உ) இப் பரிசுகள் 1971–72-ல் யார் யாருக்கு வழங்கப்பட்டன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

(அ) ஆம். மத்திய அரசு ஒவ்வொரு ஆண்டும் குழந்தைகள் இலக்கியப் பரிசுப் போட்டி நடத்தி வருகிறது.

(இ) பரிசுத் தொகை ரூ. 1,000 வழங்கப்படுகிறது.

(உ) 1971–72-ம் ஆண்டு நடைபெற்ற 16-வது தேசீயக் குழந்தைகள் இலக்கியப் பரிசுப் போட்டியில் திரு. கல்வி கோபாலகிருட்டிணன் அவர்கள் எழுதிய "கானகக் கன்னி" என்னும் நூல் சிறந்ததெனத் தேர்ந்தெடுக்கப்பட்டது. அதற்கான பரிசுத் தொகை ரூ. 1,000 தேசீயக் கல்வி ஆய்வு பயிற்சிக் கழகத்தினால் அளிக்கப்படும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, குழந்தை நூல் எழுத்தாளர்களுக்கு நம்முடைய மாநில அரசு எந்தெந்த வகையில் ஊக்கம் அளித்து வருகிறது என்பதை அறியலாமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆண்டுதோறும் மாநில அரசாங்கத்தின் சார்பாகவும், பரிசுப் போட்டிகள் மூலமாகவும் புத்தகங்கள் எழுதுகிறவர்களுக்கு பரிசுகள் நல்கி வருகிறோம். அதிலே குழந்தைகள் எழுதும் புத்தகங்களுக்கும் பரிசுகள் இருக்கின்றன. 20—25 பரிசுகள் பல்வேறு தலைப்புகளின் வாயிலாக அளிக்கப்படுகின்றன. முன்பு ரூ. 1,000 தான் பரிசு வழங்கப்பட்டது. சென்ற ஆண்டு முதல் பரிசு ரூ. 2,000 என்றும், இரண்டாம் பரிசு ரூ. 1,000 என்றும் நிர்ணயம் செய்து வழங்கப்பட்டு வருகிறது.

1972 ஆகஸ்ட் 22]

திரு. ஆ. பரந்தாமன் : தலைவரவர்களே, இந்த இந்தப் பொருள்களைப் பற்றித்தான் எழுத வேண்டுமென்று அரசு பொதுவாகக் குழந்தைகளுக்கு என்று புத்தகம் எழுதுபவர்களுக்கு ஏதாவது உத்தரவு பிறப்பித்துள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அப்படிப்பட்ட உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை. அது ஒரு இலக்கியப் பரிசு என்று சொல்லப்பட்டிருக்கிறது. இலக்கிய சம்பந்தம் உடையதாக இருக்க வேண்டும். மாணவர்கள் அறிவு வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்க வேண்டும். பாட நூல்களாக இருக்கக் கூடாது. பாட நூல்களாக இருந்தால் பரிசுகள் வழங்கப்பட மாட்டா. பாட நூல்கள் இல்லாத வகையில் பொது நூலாகவும், நல்லறிவு கொடுப்பவைகளாகவும் அந்த நூல்கள் இருக்க வேண்டுமென்றும்தான் சொல்லப்பட்டிருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, குழந்தைகளுக்கான நூல்கள் ஆங்கில மொழியில் ஏராளமாக இருக்கின்றன. ஆனால் அந்த அளவுக்கு அல்லது தேவைப்படுகிற அளவுக்கு நூல்கள் தமிழ் மொழியில் கிடைப்பதில்லை. ஆகவே, அந்த நிலையில் தமிழ் மொழியில் குழந்தைகளுக்கான நூல்களை எழுதுவதற்கு ஊக்கம் அளிக்கும் வகையில், அரசு ஏதேனும் திட்டம் உருவாக்கியிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இப்போது ஓரளவிற்குக் குழந்தைகள் நூல்கள் அதிகமாக வந்துகொண்டிருக்கின்றன. நேரு பிறந்த நாளை ஒட்டிக் குழந்தைகள் நூல் கண்காட்சி சென்ற ஆண்டு வைக்கப்பட்டது. அதிலே பல பதிப்பாளர்கள் குழந்தைகள் நூல்களை ஏராளமாகக் கொண்டுவந்து வைத்தார்கள். அவைகளில் கவர்ச்சியாகவும் பல நூல்கள் வந்திருக்கின்றன. ஆங்கிலத்தில் வந்திருக்கிற அளவுக்கு இல்லையென்றாலும், ஓரளவிற்கு இப்போது வந்துகொண்டு இருக்கின்றன. ஓரளவிற்கு அவை மதிப்பும் பெருமையும் பெற்று வருகின்றன.

திரு. த. சோனையா : தலைவரவர்களே, இப்போது குழந்தைகளுக்காக வெளியாகின்ற நூல்களை பாடப் புத்தகங்களாக வைக்க இயலாது என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அப்படிக் குழந்தைகளுக்காக வெளியிடப்படுகிற நூல்கள் வெளி மார்க்கெட்டில் விற்பது இல்லை. ஆகவே, அந்தப் புத்தகங்களை 1—2 வகுப்புகளுக்காவது வைப்பதற்கு அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, நான் அப்படிக் கூறவில்லை. பரிசு பெறுகிற நூல்கள் பாடப் புத்தகமாக வைக்கப்பட மாட்டா என்று சொல்லவில்லை. பாட நூல்களாக வைக்கப்பட்டிருக்கும் நூல்கள் பரிசு நூல்களாகக் கருதப்பட மாட்டா. இலக்கிய நூல்கள் தான் பரிசுக்கு உரியவை. அந்த நூல்கள் பாட நூல்களாகவும் பள்ளிக் கூடங்களில் வைக்கப்பட்டிருக்கின்றன.